www.Padasalai.Net www.CBSEtips.in

# KANCHIPURAM DT

## முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

**A**

பன்னிரெண்டாம் வகுப்பு பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி                    மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
   அ) தொடக்க முதல் கண்டறிய    ஆ) இறுதி முதல் கண்டறிய
   இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய    ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய
2. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்த கடனாளிகள் கணக்கு    ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு    ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
3. நிலை அறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை    ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு    ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம்    ஆ) ரொக்கம்    இ) முதல்    ஈ) இலாபம்
5. உரிமையாளரின் சொத்துகள் ₹85,000 மற்றும் பொறுப்புகள் ₹21,000 எனில் அவருடைய முதல் தொகை
   அ) ₹85,000    ஆ) ₹1,06,000    இ) ₹21,000    ஈ) ₹64,000
6. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹30,000, பெற்ற ரொக்கம் ₹1,00,000, கடன் விற்பனை ₹90,000, கடனாளிகள் இறுதி இருப்பு
   அ) ₹30,000    ஆ) ₹1,30,000    இ) ₹40,000    ஈ) ₹20,000
7. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவுக் கணக்கு    ஆ) சொத்துக் கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு    ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
8. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
   அ) பெயரளவுக் கணக்கு    ஆ) சொத்துக் கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு    ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
9. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம்    ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை    ஈ) நிதிநிலை
10. உயில் கொடை ஒரு
    அ) வருவாயினச் செலவு    ஆ) முதலினச் செலவு
    இ) வருவாயின வரவு    ஈ) முதலின வரவு

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. நிலை அறிக்கை என்றால் என்ன?

12. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?

13. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள்தருக.

14. பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுக.

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| ஆண்டு தொடக்க முதல் (1 ஏப்ரல் 2016) | 2,00,000 |
| ஆண்டு இறுதி முதல் (31 மார்ச், 2017) | 3,50,000 |
| அவ்வாண்டின் கூடுதல் முதல் | 70,000 |
| அவ்வாண்டின் எடுப்பு | 40,000 |

15. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 80,000 |
| அவ்வாண்டின் கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டின் எடுப்பு | 15,000 |
| 1.4.2017 அன்று தொடக்க முதல் | ? |
| அவ்வாண்டின் நட்டம் | 25,000 |

16. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும்?

| | (₹) |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப்பொருள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருட்கள் | 84,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருட்கள் இருப்பு | 10,000 |

17. தொடக்கமுதல் ₹10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹6,000, அவ்வாண்டின் இலாபம் ₹2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹3,000 எனில் இறுதி முதல் கணக்கிடுக.

பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 5 x 3 = 15

18. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை? (ஏதேனும் மூன்று)

19. நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.

20. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

21. பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்.

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள் திருப்பம் | 15,000 |
| வாராக்கடன் | 5,000 |
| 2019 மார்ச் 31 அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



22. ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.

| விவரம் | 1.1.2018 (₹) | 31.12.2018 (₹) |
|---|---|---|
| சந்தா பெற வேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹45,000

23. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | (₹) |
|---|---|
| தொடக்க கடனீந்தோர் | 1,70,000 |
| கொள்முதல் திருப்பம் | 20,000 |
| கடனீந்தோருக்குச் செலுத்தியது | 4,50,000 |
| இறுதி கடனீந்தோர் | 1,90,000 |

24. கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31ஆம் நாளைய முதல் நிதியினைக் கணக்கிடவும்.

| விவரம் | (₹) |
|---|---|
| அறைகலன் | 50,000 |
| கட்டடம் | 40,000 |
| 2017-18 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது | 10,000 |
| 2018-19 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டி பெற்றது | 5,000 |
| கடன் வாங்கியது | 10,000 |
| முதலீடுகள் | 20,000 |
| கை ரொக்கம் | 4,000 |
| வங்கி ரொக்கம் | 6,000 |

## பகுதி – ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 5 = 15**

25. அ) நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

*(அல்லது)*

ஆ) ராஜா முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

| விவரம் | 1.1.2018 (₹) | 31.12.2018 (₹) |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கி கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதம்தோறும் ₹2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



26. அ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

*(அல்லது)*

ஆ) காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| *விவரம்* | *(₹)* |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர்விளையாட்டுப்போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர்விளையாட்டுப்போட்டிச் செலவுகள் | 60,000 |

27. அ) பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல், நிலை முதலாக இருக்கும்போது தயாரிக்கவும்.

| *விவரம்* | *சாந்தி (₹)* | *சுமதி (₹)* |
|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 | 80,000 |
| 2018 ஜனவரி 1 அன்று நடப்பு கணக்கு (வ) | 5,000 | 3,000 |
| 2018 ஜுன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 10,000 | 20,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 20,000 | 13,000 |
| எடுப்பு மீது வட்டி | 500 | 300 |
| 2018 ல் இலாபப் பங்கு | 10,000 | 8,000 |
| முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| ஊதியம் | 9,000 | Nil |
| கழிவு | Nil | 1,200 |

*(அல்லது)*

ஆ) நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## காஞ்சிபுரம் மாவட்டம்

# முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2023

## 12 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | அ | தொடக்க முதல் கண்டறிய |
| 2 | அ | மொத்தக் கடனாளிகள் கணக்கு |
| 3 | ஆ | சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை |
| 4 | இ | முதல் |
| 5 | ஈ | ₹. 64,000 |
| 6 | ஈ | ₹. 20,000 |
| 7 | அ | பெயரளவுக் கணக்கு |
| 8 | ஆ | சொத்து கணக்கு |
| 9 | இ | உபரி அல்லது பற்றாக்குறை |
| 10 | ஈ | முதலின வரவு |

### பகுதி --- II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

**11. நிலைஅறிக்கை என்றால் என்ன?**

- நிலை அறிக்கை என்பது, ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.

**12. முழுமைபெறா பதிவேடுகள் என்றால் என்ன?**

- கணக்கேடுகள், இரட்டைப் பதிவு முறையின்படி பராமரிக்கப்படாத போது, அந்த பதிவேடுகள் முழுமைபெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

**13. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.**

- இலாப நோக்கம் இல்லாமல், பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தில் செயல்படும் அமைப்புகளே, இலாப நோக்கற்ற அமைப்புகள் எனப்படும்.

**14.**

**2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான**

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2017) | 3,50,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 40000 |
| | 3,90,000 |

| | |
|---|---|
| கழிக்க : கூடுதல் முதல் | 70,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 3,20,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 01.4.2016 ) | 2,00,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 1,20,000 |

( அல்லது )

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இறுதி முதல் | 3,50,000 | தொடக்க முதல் | 2,00,000 |
| எடுப்புகள் | 40,000 | கூடுதல் முதல் | 70,000 |
| நட்டம் | --- | இலாபம் | 1,20,000 |
| | 3,90,000 | | 3,90,000 |

∴ இலாபம் ₹. 1,20,000

15. **2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான**

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2018) | 80,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 15,000 |
| | 95,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 30,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 65,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 01.04.2017 ) | 90,000 |
| அவ்வாண்டின் நட்டம் | (-) 25,000 |

( அல்லது )

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இறுதி முதல் | 80,000 | தொடக்க முதல் | 90,000 |
| எடுப்புகள் | 15,000 | கூடுதல் முதல் | 30,000 |
| நட்டம் | 25,000 | இலாபம் | ---- |
| | 1,20,000 | | 1,20,000 |

∴ தொடக்கமுதல் ₹. 90,000

www.Padasalai.Net

16.

**மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | தொகை ₹. | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| பயன்படுத்தப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் : | | | | |
| தொடக்க இருப்பு | 16,000 | | | |
| கூட்டுக : நடப்பு ஆண்டு வாங்கியது | 84,000 | | | |
| | 1,00,000 | | | |
| கழிக்க : இறுதி இருப்பு | 10,000 | 90,000 | | |

17.

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் | 9,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 6,000 |
| | 15,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 3,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 12,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஜனவரி1 ) | 10,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 2,000 |

( அல்லது )

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இறுதி முதல் | 9,000 | தொடக்க முதல் | 10,000 |
| எடுப்புகள் | 6,000 | கூடுதல் முதல் | 3,000 |
| நட்டம் | --- | இலாபம் | 2,000 |
| | 15,000 | | 15,000 |

∴ இறுதிமுதல் ₹. 9,000



www.Padasalai.Net

## பகுதி - III

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $5 \times 3 = 15$

**18. முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?**

1) **பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:**
   - இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும்.
   - சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவது இல்லை.

2) **இருப்பாய்வு தயாரிப்பது கடினம்:**
   - கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால், கணக்கேடுகள் முழுமையற்றதாக உள்ளன.
   - எனவே, கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்து கொள்ள, இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.

3) **வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனைகண்டறிவது கடினம்:**
   - இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப் படுகிறது. எனவே, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாததால் உண்மையான இலாபத்தை கண்டறிவது கடினம்.

4) **தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது:**
   - பதிவேடுகளின் ஒரு பகுதி மட்டுமே பெறப்படுவதால், கணக்கேடுகள் பராமரித்தலின் போது, அகச் சோதனை செய்து, தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிய முடியாமல் இருக்கலாம்.

**19. நிலைஅறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.**

- நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள் பின்வருமாறு:

i) ஆண்டு தொடக்கத்தில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளைக் கொண்டு தொடக்க நிலையறிக்கை தயாரித்து, தொடக்க முதலைக் கண்டறியவும்.

ii) கணக்காண்டின் இறுதியில் தேய்மானம், வாராக்கடன், கொடுபடவேண்டிய மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள், பெறவேண்டிய வருமானம், முதல்மீது வட்டி, எடுப்பு மீது வட்டி போன்றவற்றிற்குத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பின், இறுதி நிலையறிக்கை தயாரித்து, இறுதி முதல் கண்டறியவும்.

iii) இறுதி முதலுடன் எடுப்புத் தொகையினை (பணம் மற்றும் / பொருட்கள் இரண்டும்) கூட்டவும்.

iv) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலைக் கண்டறிய, கூடுதல் முதலைக் கழிக்கவும்.

v) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து, தொடக்க முதலைக் கழித்து, இலாபம் அல்லது நட்டத்தினைக் கண்டறியவும்.

அ) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலானது, தொடக்க முதலைவிட அதிகமானதாக இருந்தால், அது இலாபத்தைக் குறிக்கும்.

ஆ) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலானது, தொடக்க முதலைவிட குறைவானதாக இருந்தால், அது நட்டத்தைக் குறிக்கும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**20. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?**

- வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது, இலாப நோக்கற்ற அமைப்புகளில், கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் வருவாய் மற்றும் செலவுகளின் தொகுப்பாகும்.
- ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய, வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

**21.**

ப **மொத்த கடனாளி கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 50,000 | ரொக்க க/கு ( பெற்றது ) | 1,50,000 |
| விற்பனை க/கு ( கடன் ) ( இருப்பு கட்டும் தொகை) | 1,90,000 | உள்திருப்பம் க/கு | 15,000 |
| | | வாராகடன் க/கு | 5,000 |
| | | இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 70,000 |
| | 2,40,000 | | 2,40,000 |

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

= ₹. 1,40,000 + ₹. 1,90,000 = ₹. 3,30,000

**22.**

**2018 ஆம் ஆண்டுக்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| 2018ஆம் ஆண்டில் பெற்ற சந்தா | | 45,000 |
| கூட்டுக : 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017 - ல் பெற்றது | 4,000 | |
| 2018 ஆம் ஆண்டிற்கான பெற வேண்டிய சந்தா | 5,000 | 9,000 |
| | | 54,000 |
| கழிக்க : 2017 - ல் பெற வேண்டிய சந்தா | 3,000 | |
| 2018 - ல் முன்கூட்டிப் பெற்ற சந்தா | 7,000 | 10,000 |
| 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம் | | 44,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

23.

ப **மொத்த கடனீந்தோர் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| ரொக்க க/கு (செலுத்தியது) | 4,50,000 | இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 1,70,000 |
| கொள்முதல் திருப்பம் க/கு | 20,000 | கொள்முதல் க/கு ( கடன்) ( இருப்பு கட்டும் தொகை) | 4,90,000 |
| இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 1,90,000 | | |
| | 6,60,000 | | 6,60,000 |

∴ கடன் கொள்முதல் ₹. 4,90,000

24.

**சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹ | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| முதல் நிதி ( இருப்பு கட்டும் தொகை ) | 1,15,000 | அறைகலன் | 50,000 |
| | | கட்டடம் | 40,000 |
| சந்தா முன்கூட்டிப் பெற்றது | 5,000 | சந்தா பெறவேண்டியது | 10,000 |
| கடன் வாங்கியது | 10,000 | முதலீடுகள் | 20,000 |
| | | கை ரொக்கம் | 4,000 |
| | | வங்கி ரொக்கம் | 6,000 |
| | 1,30,000 | | 1,30,000 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. அ) நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| நோக்கம் | இது, வியாபாரத்தின் முதலைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது | இது, வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது |
| கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது, நிலையறிக்கை தயாரிக்கப்படும். | இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் பராமரிக்கப்படும் போது, இருப்புநிலை குறிப்பு தயாரிக்கப்படும். |



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| தயாரிப்பின் அடிபடை | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது |
| நம்பகத்தன்மை | இது, முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மை உடையது அல்ல | இது, இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால், நம்பகத்தன்மை உடையது. |
| விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது எளிது. |

( அல்லது )

25. ஆ)

**தொடக்க முதல் கணக்கிடுதல்**

**ராஜா என்பவரின் ஏடுகளில் 2018, ஜனவரி 1 ஆம் நாளைய நிலையறிக்கை**

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | கைரொக்கம் | 80,000 |
| வங்கி கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | கடனாளிகள் | 90,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 2,50,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 5,20,000 | | 5,20,000 |

**இறுதி முதல் கணக்கிடுதல்**

**ராஜா என்பவரின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய நிலையறிக்கை**

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,95,000 | கைரொக்கம் | 90,000 |
| வங்கி கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 45,000 | கடனாளிகள் | 2,00,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 3,00,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 6,00,000 | | 6,00,000 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான**
**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் | 3,00,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் ( 2,500 x 12 மாதங்கள் ) | 30,000 |
| | 3,30,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 50,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 2,80,000 |
| கழிக்க: தொடக்க முதல் | 2,50,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 30,000 |

26. அ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|
| நோக்கம் | இது, ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது | இது உபரி அல்லது பற்றாக்குறை குறித்து அறிந்துகொள்ள தயாரிக்கப்படுகிறது |
| கணக்கின் தன்மை | இது, ஒரு சொத்துக் கணக்காகும். இது, ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன | இது, ஒரு பெயரளவுக் கணக்காகும். இது, இலாபநட்ட கணக்கைப் போன்றதாகும். செலவுகள் பற்றுப் பக்கத்திலும், வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன |
| கணக்கியலின் அடிப்படை | இது, ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது | இது, நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது |
| தொடக்கம் மற்றும் இறுதி இருப்பு | இது, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு, இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது |
| நடவடிக்கையின் தன்மைகள் | இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடு இல்லாமல், அனைத்துப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களைக் கொண்டிருக்கும் | இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே, அதாவது வருவாயினச் செலவுகள் மற்றும் வருவாயின வரவுகள் மட்டுமே கொண்டிருக்கும். |



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| காலம் | நடப்பு ஆண்டில் மேற்கொண்ட அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள், அவை கடந்து ஆண்டு, நடப்பு ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டிற்குரியதாக இருந்தாலும், இங்கு பதியப் படுகின்றன. | நடப்பு ஆண்டிற்குரிய நடவடிக்கைகள் மட்டும் இது கொண்டிருக்கும். |

( அல்லது )

26. ஆ)

காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

ப வ

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 | | விளையாட்டுப் போட்டின் நிதி முதலீடு | 90,000 |
| கூட்டுக : தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 | | | |
| கூட்டுக : தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 | | | |
| | 1,09,000 | | | |
| கழிக்க : தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 | 49,000 | | |

27. அ)

ப **முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | சாந்தி ₹ | சுமதி ₹ | நாள் | விவரம் | சாந்தி ₹ | சுமதி ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 31.12.18 | இருப்பு கீ/இ | 1,10,000 | 1,00,000 | 01.01.18 | இருப்பு கீ/கொ | 1,00,000 | 80,000 |
| | | | | 01.06.18 | வங்கி (கூடுதல் முதல்) | 10,000 | 20,000 |
| | | 1,10,000 | 1,00,000 | | | 1,10,000 | 1,00,000 |
| | | | | 01.01.19 | இருப்பு கீ / இ | 1,10,000 | 1,00,000 |

**ப நடப்பு கணக்கு வ**

| நாள் | விவரம் | சாந்தி ₹ | சுமதி ₹ | நாள் | விவரம் | சாந்தி ₹ | சுமதி ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்புகள் | 20,000 | 13,000 | | இருப்பு கீ/கொ | 5,000 | 3,000 |
| | எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 | | இலாப நட்ட பகிர்வு க/கு | 10,000 | 8,000 |
| | இருப்பு கீ/இ | 9,800 | 4,300 | | முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| | | | | | சம்பளம் | 9,000 | --- |
| | | | | | கழிவு | --- | 1,200 |
| | | 30,300 | 17,600 | | | 30,300 | 17,600 |
| | | | | | இருப்பு கீ/கொ | 9,800 | 4,300 |

( அல்லது )

27. ஆ) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| 1. கணக்குகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் அதாவது, முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு பராமரிக்கப்படுகின்றன. | ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஒரே ஒரு கணக்கு அதாவது, முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகின்றன. |
| 2. முதல் தொகையில் மாற்றம் | கூடுதல் முதல் கொண்டு வரும்போது அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுக்கும் போது தவிர, மற்ற நேரங்களில் முதல் தொகை வழக்கமாக மாறாமல், நிலையாக இருக்கும். | முதல் தொகை பருவந்தோறும் மாறிக்கொண்டே இருக்கும் |
| 3. இறுதி இருப்பு | முதல் கணக்கு எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும். ஆனால், நடப்புக் கணக்குகள் பற்று இருப்பையோ அல்லது வரவு இருப்பையோ காட்டும் | முதல் கணக்குகள் பொதுவாக வரவு இருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூட காட்டலாம். |
| 4. சரிக்கட்டுதல்கள் | கூட்டாளிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் பதியப்படும் | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் பதிவு செய்யப்படும் |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com